அடுத்து பனையங்குறிச்சி, காசிநாதபுரம், புங்கம்பட்டி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகள் இல்லை. அருகிலே உள்ள கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், பல கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அங்கே பகுதி நேரக் கடைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்து, அதற்குப் பின்னர் தேவைப்பட்டால், அங்கே பகுதி நேரக் கடைகளைத் திறக்கலாம் என்று அரசினுடைய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. சாத்தியக் கூறுகள் இருக்குமானால், குறிப்பிட்ட இடங்களில் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புயலால் ஏற்பட்டுள்ள சேதங்களையொட்டிய நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது குறித்தும் "ரா" நிறுவனம் குறித்து முதலமைச்சர் பேசியது பற்றி வெளியில் ஒரு கட்சித் தலைவர் தெரிவித்துள்ள கருத்து குறித்தும்.

திரு. எம். அப்துல் லத்திப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தகவலுக்காக நான் எழுப்புகிறேன். நேற்றையதினம் தொலைக் காட்சியில் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் உருவான புயல், அதனால் உருவான சேதங்கள், இவைகளுக்கு மத்திய அரசின் சார்பாக ஆந்திர மாநிலத்திற்கு 89 கோடியும், தமிழ் மாநிலத்திற்கு 39 கோடியும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அளித்திருப்பதாகவும், பிரதமர் அவர்கள் அதற்கான அறிவிப்பைச் செய்திருப்பதாகவும், தொலைக்காட்சியில் செய்தியை நாம் அறிந்தோம். இன்று பத்திரிகையிலேயும் அந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. புயலோடு போட்டி போட்டுக் கொண்டு புயல் வேகத்தை விட மிக வேகமாக நிவாரணப் பணிகளைக் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் செயல்பட்டதற்காகவும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், வருமுன் காக்க என்பதைப் போல பாரத துணைப் பிரதமர் மாண்புமிகு தேவிலால் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதைப் போல, மிகச் சிறந்த முறையில் தடுப்பு நடவடிக்கைகளை, காக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருப்பதற்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைப்பாக செயல்பட்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நிவாரணப் பணிகளுக்கான தொகைகளை அவர்கள் எந்த வகையிலே நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதையும் அரசு அதிகாரப்பூர்வமான—பத்திரிகை செய்தியைத்தான் நாம் படித்திருக்கிறோம் அதிகாரப்பூர்வமான—செய்திகள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 மே 11]   [திரு. எம். அப்துல் லத்தீப்]

அதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இன்னொரு தகவலையும், அது நாட்டுக்குத் தேவை என்பதற்காக நாங்கள் அறிய விரும்புகிறோம். இன்றைய தினம் பத்திரிகையிலே 'ரா' நிறுவனத்தைப் பற்றி ஒரு முக்கியமான தமிழ் நாட்டுத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் அந்த 'ரா' நிறுவனத்தினுடைய நடைமுறைகளை, நடவடிக்கைகளைக் குறித்து சட்டமன்றத்திலே தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சில உண்மைகளை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும், ஆதாரம் இருந்தால் நிரூபிக்க வேண்டும் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். 'ரா' நிறுவனம் என்பது மத்திய அரசினுடைய ரகசிய நிறுவனம்.

10-20 மணி

இது தொடர்பாகச் செய்திகள், தகவல்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது நன்மையை உத்தேசித்து ரகசிய காப்பு என்ற அடிப்படையிலே தான் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இந்த நிலையிலே பத்திரிகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏதோ ஒரு தவறான தகவலைத் கொடுத்து இருப்பதைப்போல் ஒரு எண்ணத்தை உருவாக்கிடும் வகையிலே ஒரு தலைவர் தகவலை, செய்தியை வெளியிட்டு, அதைக்குறித்து தகவலைக் கேட்டிருக்கிறாரே, அது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தொலைக்காட்சியில் தமிழகத்திற்கு நிவாரண நிதியாக ரூ. 39 கோடி என்று அறிவிக்கப்பட்டதும் நான் கூட கொஞ்சம் ஆதங்கப்பட்டேன். புயல் கொஞ்சமாவது இங்கு வீசக் கூடாதா என்று ஆதங்கப்பட்டேன். உடனடியாக உரியவர்களோடு தொடர்பு கொண்டு விசாரித்து, பிறகு அதை இங்கே விளக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்கிடையே நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இதைப்பற்றி இங்கே பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

1—4—1990 முதல் 9ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைக் கேற்ப இயற்கை, இன்னல் நிவாரணப் பணிகளின் செலவை மத்திய மாநில அரசுகள் ஏற்கும் முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அதாவது 31—3—1990 வரை, தமிழக அரசும் மத்திய அரசும் 50 : 50 அதாவது பாதிப் பாதி விகிதத்தில் ஒவ்வொரு ஆண்டும் அதற்கு ரூ. 15.50 கோடி நிதி ஒதுக்க வேண்டும். அதாவது ரூ. 15½ கோடி ஒதுக்க வேண்டுமென்று

இதற்கு முன்பு இருந்தது, 50 : 50 என்ற வகையில். அதைவிட அதிகத்தொகை செலவழிக்க வேண்டியிருந்தால் தேவைகளை விவரித்து நிதி ஒதுக்கக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஒரு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். ஏற்கெனவே இருந்த முறை இது. மத்திய அரசு ஒரு அலுவலர் குழுவை அனுப்பிப் பாதிக்கப் பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செய்து, அவர்கள் அறிக்கையின் மீது அதிகபட்சம் ஒவ்வொரு இனத்திற்கும் எவ்வளவு செலவிடலாம் என்று நிர்ணயித்து ஒரு உத்தரவு வழங்கும். இனி இந்த உச்சவரம்பிற்குட்பட்டுச் செய்யப்படும் செலவும் மத்திய மாநில அரசுகளால் குறிப்பிடப்பட்ட வெவ்வேறு விகிதங்களில் பகிர்ந்தளிக்கப்படும் உச்சவரம்பிற்கு மேற்பட்ட செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்க வேண்டும். இந்த நடைமுறையினால் மாநில அரசு செய்ய வேண்டிய செலவுக்கு மத்திய அரசின் முன்னனுமதி கோரும் பிரச்சினை ஒரு பக்கம், நிர்வாகச் சிக்கலும் காலதாமதமும் மறு பக்கம் என்ற வகையில் மாநிலங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த ஆண்டு முதல் அமலுக்கு வருகின்ற புதிய கொள்கையின்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு துயர்துடைப்பு நிதி ஏற்படுத்தப்படும். இதன் அளவை நிதிக் குழுவே நிர்ணயித்திருக்கிறது. அதன்படி தமிழக அரசின் நிதி அளவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 39 கோடியாகும். இந்நிதிக்கு மத்திய மாநில அரசுகள் 75 : 25 என்ற விகிதத்தில் பணம் செலுத்தும். வெள்ளம், புயல், வறட்சி, தீ விபத்து முதலிய எல்லாவிதமான இடர்பாடுகளுக்கும் நிவாரணம் இந் நிதியிலிருந்து மாநில அரசுகளுடைய விருப்பப்படி செலவிட்டுக் கொள்ளலாம். மத்திய அரசினுடைய அலுவலர் குழு பார்வையிடுதல், அவர்களின் முன் அனுமதி பெறுதல், போன்ற நடைமுறைகள் கிடையாது. இந்த நிதிக்கு மேலும் செலவு செய்ய வேண்டுமென்றால் அதை மாநில அரசே முழுவதும் ஏற்க வேண்டும். இந்த ஆண்டு நிதியே மிகுதியாக இருந்தால் அதை அடுத்த ஆண்டுச் செலவிற்கும் மாற்றிக் கொள்ளலாம். இந்த நிலையில் தமிழக வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசு ரூ. 39 கோடி அளிப்பதாக அறிவித்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல. மேலே சொன்ன துயர் துடைப்பு நிதி இன்னும் அமலுக்கே வரவில்லை. மத்திய அரசு அதற்கான விதிமுறைகளையும் வழிமுறைகளையும், பரிசீலித்துக் கொண்டு இருப்பதாகத் தான் செய்தி வந்துள்ளது. எனவே, புயல் வேகத்தில் மத்திய அரசு அறிவித்ததாகத் தொலைக்காட்சியில் சொல்லப்பட்டது, புயல் வேகத்தில் சொல்லப்பட்ட ஒரு செய்தியே அல்லாமல் வேறு அல்ல. உண்மை நிலவரம் இதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, ''ரா''வைப் பற்றி ஒரு தலைவர் இங்கே பேசியிருப்பதாக நம்முடைய நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டு விளக்கம் கேட்டார். அதுவும் அவர்கள் திருவிளையாடல்தான்.